# <u>கடலூர் மாநகராட்சி</u>

**2022ம் ஆண்டு மார்ச் மாதம் 23–ம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கீழ்க்கண்ட பொருட்கள் சம்பந்தமாக கடலூர் மாமன்றத்தின் கூட்டம் கடலூர் மாமன்ற கூடத்தில் (Council Hall) நடைபெறும்.**

மாநகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 18.03.2022

ஆணையாளர்
கடலூர் மாநகராட்சி.

## <u>பொருட்கள்</u>

| | |
|---|---|
| 1) | **மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**<br><br>கடலூர் பெருநகராட்சியை மாநகராட்சி என்று அறிவித்தமைக்கும், கடலூர் மாநகராட்சிக்கு முதல் மேயராக பெண் மேயர் தேர்வு செய்யப்படுவார் என்ற அறிவிப்பை வெளியிட்டமைக்கும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் உயர்திரு மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.<br>கடலூர் மாநகராட்சியின் முதல் பெண் மேயராக **திருமதி.சுந்தரி ராஜா** ஆகிய என்னை தேர்வு செய்யப்பட்டமைக்கும், முதல் துணை மேயராக **திரு.பா.தாமரைச்செல்வன்** அவர்களை தேர்வு செய்தமைக்கும் **மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு** அவர்களுக்கும் மற்றும் கடலூர் மாவட்ட அமைச்சர், **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** அவர்களுக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். |

| | |
|---|---|
| | கடலூர் மாநகராட்சியின் முதலாவது மாமன்றத்தின் 45 வார்டுகளுக்கும் உறுப்பினர்களாக எங்களை தேர்ந்தெடுத்த கடலூர் நகர பெருமக்களுக்கு எங்களின் நன்றியினையும் வணக்கத்தினையும் தெரிவித்துக் கொள்கிறோம். இம் மாமன்றத்தின் பதிவிற்காக. |
| அ.கு. | பதிவு செய்யலாம். |
| 2) | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 3587/2014/இ1 நாள் 08.09.2021 தேதியிட்ட கடிதத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் தெரு விளக்குகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் டியூப் லைட், சோடியம், சி.எப்.எல் மற்றும் உயர்மின் கோபுர விளக்குகளை LED விளக்குகளாக மாற்றி அமைத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, கடலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெரு விளக்குகளான டியூப் லைட், சோடியம், சி.எப்.எல் மற்றும் உயர்மின் கோபுர விளக்குகளை LED விளக்குகளாக மாற்ற மதிப்பீடு ரூ.1023.67 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கையினை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி தெருமின் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றுவதற்கான நிதியினை முழு மானியமாக பெற்று செயல்படுத்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>( 938/2022/இ2) |
| 3) | கடலூர் மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் அமைந்துள்ள மின் பளு தூக்கி (lift) இயங்காமல் உள்ளது. தற்போது மாமன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவி ஏற்றுள்ளதால் அலுவலக முதல் தளத்திற்கு செல்ல மின் பளு தூக்கி (lift) ஐ பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே, மின் பளு தூக்கி (lift ) யினை வருடாந்திர பராமரிப்பு பணி ரூ. 0.75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும், இச்செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 4) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 34 வசந்தராயன்பாளையம் பிரதான சாலையில் ஏற்கனவே உள்ள சிறுபாலம் குறுகலாக உள்ளதால் போக்குவரத்திற்கும் பொதுமக்கள் சென்று வருவதற்கும் மிகவும் சிரமமாக உள்ளது. மேற்படி பகுதியில் புதிதாக சிறுபாலம் அமைக்கும் பணி ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும், இச்செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

<table>
<tr><td>அ.கு.</td><td>மன்றம் அனுமதிக்கலாம்</td></tr>
<tr><td>5)</td><td>மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர் அவர்களின் நடவடிக்கைகள். ந.க.எண்.அ3/5262/2021 நாள் 07/03/2022ன்படி, கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021–22 ன் கீழ். கீழ்குறிப்பிட்டுள்ளவாறு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>சோனங்குப்பம் புயல் பாதுகாப்பு இல்லம் அருகில் 9 மீ. மினி உயர்மின் கோபுர விளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைத்தல்.</td><td>4.50</td></tr>
<tr><td>2</td><td>திருப்பாப்புலியூர் – கம்மியம்பேட்டை இணைப்பு சாலை ( பராசக்தி கோயில் அருகில்) 9 மீ. மினி உயர்மின் கோபுர விளக்கு 6 எண்ணிக்கை கொண்ட 100 வாட்ஸ் LED விளக்கு அமைத்தல்.</td><td>4.50</td></tr>
</table>
மேற்படி 2 பணிகள் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.</td></tr>
<tr><td>அ.கு.</td><td>மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>6)</td><td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.2983/2022/SBM நாள்:24.02.2022 தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் IEC பணிகளுக்காக பணிபுரியும் பரப்புரையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்களுக்கு 2022–2023 முதல் 2025–2026 வரையிலான நான்கு ஆண்டுகளுக்கு ஊதியம் வழங்குவதற்காக மாநகராட்சிகளே உரிய வழிகாட்டுதலின்படி ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்து தூய்மை இந்தியா திட்ட பணிகளை மேற்கொள்ள கடலூர் மாநகராட்சிக்கு 22 பரப்புரையாளர்கள், 3 மேற்பார்வையாளர்கள், 1 ஒருங்கிணைப்பாளர் வீதம் 2022–2023ம் ஆண்டிற்கு ஊதியமாக ரூ.54.81.010/– அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td></tr>
<tr><td>அ.கு.</td><td>மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>7)</td><td>கடலூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் தினசரி சேகரிக்கப்படும் திடக்கழிவுகளை, தரம் பிரித்து மக்கும் குப்பைகள் மாநகராட்சிக்கு சொந்தமான 3 நுண்உர மையங்களில் உரமாக்கப்படுகிறது. மறு சுழற்சி செய்யக்கூடிய (ம) மறு சுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகள் அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதர கழிவுகளை மீண்டும் தரம் பிரித்து முறையாக அப்புறப்படுத்த இட வசதி இல்லாததால் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் தொய்வு ஏற்பட்டு வருகிறது. எனவே கம்மியம்பேட்டை பகுதியிலுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பழைய உரக்கிடங்கில் தற்காலிகமாக குப்பைகளை கையாளவும், உடனுக்குடன் அப்புறப்படுத்த ஏதுவாகவும் அப்பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள</td></tr>
</table>

| | |
|---|---|
| | பணியின் அவசர அவசியம் கருதியும் , பொது சுகாதார நலன் கருதியும் மேயர் அவர்களது முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் பின்னேற்பு அளிக்கலாம். |
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம். |
| **8)** | கடலூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள 11 துப்புரவு பணி பிரிவுகள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட துப்புரவு பணி பிரிவு அலுவலகங்களில் பிறப்பு, இறப்பு பதிவுகள் பதிவு செய்யும் பணிகளும், கிருமி நாசினிகள் (ம) தளவாடப் பொருட்கள் இருப்பு வைத்து பராமரிக்கப்பட்டும் வருகிறது. மேலும் பொது சுகாதார பிரிவு அலுவலகங்களில் (Divisional Office) பொதுமக்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் அன்றாடம் வந்து செல்லும் அலுவலகமாக உள்ள நிலையில், அலுவலக கட்டிடங்கள் போதிய இட வசதியின்றியும், பழைய கட்டிடமாகவும் இருப்பதால் 11 துப்புரவு பணி பிரிவு அலுவலகங்கள் புதியதாக கட்டுவதற்கு 2022–2023ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ள சிறப்பு மானியத்தில் செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது. |
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம். |
| **9)** | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட 7 எண்ணிக்கை அரசு பள்ளிகளில் உள்ள கழிப்பறை மற்றும் பள்ளி வளாகங்களை தூய்மைப்படுத்தும் பணிக்கு 16 எண்ணிக்கை தூய்மை பணியாளர்களை தனியார் மூலம் அமர்த்திடும் பணிக்கு நகர் மன்ற தீர்மான எண்.2850 நாள் 16.03.2020ல் அனுமதிக்கப்பட்டபடி 11 மாதங்களுக்கு பணியினை மேற்கொள்ள திரு.டி.ஷோத்திரி ஒப்பந்தாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. தற்பொழுது மார்ச் 2022 உடன் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்த காலம் முடிவடைவதால் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.32050/2016/ஜே2 நாள்:26.10.2017ன்படியும், பள்ளி மாணவர்களின் நலன் கருதியும் தொடர்ந்து இப்பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.<br><br>எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைக்கடிதம் எண்.M2/14097/2021 நாள்:08.07.2021ன் 2021–2022ம் ஆண்டிற்கான தினக்கூலி விகிதம் நிர்ணயம் செய்துள்ளதால் தூய்மை பணியாளர் ஒருவருக்கு 405/– வீதம் 16 எண்ணிக்கை தூய்மை பணியாளர்களை அரசு பள்ளிகளில் உள்ள கழிப்பறை மற்றும் பள்ளி வளாகம் தூய்மைப்படுத்தும் பணிக்கு அமர்த்திக் கொள்ள ஆகும் ஆண்டு தோராய செலவினம் ரூ.22.00 லட்சம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம். |
| **10)** | கடலூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் 192 நிரந்தர தூய்மை பணியாளர்கள் மற்றும் வெளிகொணர்வு முகமையின் மூலம் (Out Sourcing ) 157 நபர்களும் தற்பொழுது தூய்மை பணிகளை மேற்கொள்ளுவதற்காக பணிபுரிந்து வருகின்றனர். இம்மாநகராட்சியானது 2011ம் ஆண்டின் மக்கள் தொகை 1,73,636 ஆகும். தற்போதைய மக்கள் தொகை 1,98,109 ஆகும். இம்மாநகராட்சியில் 27.69 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 45 வார்டுகளை கொண்டதாக அமைந்துள்ளது. |

| | |
|---|---|
| | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.21878/2021/EA2 நாள்:02.10.2021ல் வெளியிட்டுள்ள அளவு கோலின்படி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.10570/2019/எச்1 நாள் 12.10.2021ல் பொது சுகாதார பணிகள் வெளிகொணர்வு முகமையின் மூலம் (Out Sourcing ) மேற்கொள்ளுவதற்கு உரிய அனுமதி வழங்கக்கோரி பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>இந்நிலையில் கடலூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு 45 வார்டுகளுக்கு கழிவு நீர் கால்வாய் தினசரி சுத்தம் செய்வதற்காக 45 தூய்மை பணியாளர்களும், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக மக்கும் குப்பைகளை தரம் பிரித்து முறையாக கையாள வசந்தராயன் பாளையம், குண்டுசாலை, பாபு கலையரங்கம் ஆகிய 3 நுண் உயிர் மையங்களில் பணியினை செய்வதற்கு 24 தூய்மை பணியாளர்களும் இம்மாநகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள 3 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தலா 2 பேர் வீதம் 6 தூய்மை பணியாளர்கள் தேவைப்படுவதால் ஆக மொத்தம் 75 தூய்மை பணியாளர்கள் வெளிகொணர்வு முகமை மூலம் 6 மாத காலங்களுக்கு பணியமர்த்தி கொள்வதற்கும், மேலும் இதற்கான தோராய செலவினம் ரூ.65.00 லட்சம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது அனுமதி வேண்டி கருத்துரு சமர்பிக்கவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |
| 11) | கடலூர் மாநகராட்சி பகுதி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டு (ODF) தொடர்ந்து அதே நிலையிலேயே கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தற்போழுது அதன் அடுத்த நிலையான (ODF+) சான்று பெறுவதற்கு கடலூர் மாநகராட்சி பகுதிகளில் திறந்தவெளியில் மலம், சிறுநீர் கழித்தல் அற்ற பகுதியாக (ODF+) அறிவிப்பு செய்திட பொதுமக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகள் பெற ஏதேனும் ஒரு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.15,000/— மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி விளம்பரம் செய்திட நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 12) | கடலூர் மாநகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டம், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மத்திய அரசின் (MOUD) துறையினர் 3 நட்சத்திர அந்தஸ்து (3 STAR) ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிற்கும் வழங்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக கடலூர் மாநகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையாக தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் 2ம் நிலை சேகரம் செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே கடலூர் மாநகராட்சியை குப்பையில்லா மாநகராட்சியாக (GARBAGE FREE CITY) மத்திய அரசால் (MOUD) வழங்கப்படும் மூன்று நட்சத்திர அங்கீகாரம் (3 STAR RATING) பெற சுய உறுதிமொழி சான்றுக்கு (SELF DECLARATION) அனுமதியும், மேலும் இது தொடர்பாக பொதுமக்களின் கருத்து மற்றும் ஆட்சேபனைகள் பெற ஏதேனும் ஒரு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திடவும், இதற்கான தோராய செலவினம் ரூ.15,000/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது. |

| | |
|---|---|
| **அ.கு.** | திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **13)** | மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P.NO.16283,16286 (ம) 16369 நாள்:06.08.2021ம் தேதிய உத்தரவிற்கிணங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.16648/21/டிபி2 நாள்:07.09.2021 மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் அவர்களின் 30.11.2021ம் தேதிய நேரடி அறிவுரைப்படியும் கடலூர் மாநகரில் புயல் வெள்ளம் பாதிப்பு காரணமாக மாநகரின் அனைத்து பகுதிகளும் பாதிக்கப்படுவதால் இதற்கு காரணமான நீர் நிலைகள் மற்றும் வாய்க்கால்களில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளதால் மழை தண்ணீர் வெளியேற வழி இல்லாமல் குடியிருப்புகளுக்குள் புகுந்து மிகவும் அவதிக்குள்ளாகுகிறது.<br><br>எனவே மேற்கண்ட உத்தரவுகள் மற்றும் அறிவுரைகளின்படி கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர்நிலை ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து அதன் விவர பட்டியல் தயார் செய்து ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டி 01.12.2021, 03.03.2022 மற்றும் 08.03.2022 ஆகிய தேதிகளில் நகர சார் ஆய்வர், நகரமைப்பு ஆய்வர் மற்றும் நகரமைப்பு அலுவலர் ஆகியோர்களுக்கு குறிப்பு வழங்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் அவர்களின் நேர்முக கடித எண்.வி3/12132/2016 நாள்:03.03.2022ம் தேதிய கடிதத்தின் வாயிலாக மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை உடன் அகற்றிட செயல்திட்டம் தயார் செய்யப்பட்டு மாநகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட விவரப்படியான 12 நீர்நிலைகளின் ஆக்கிரமிப்புகளை 20.03.2022ம் தேதிக்குள் அகற்றப்பட்டு அதன் விவரம் சமர்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>**<u>கீழ்கண்ட நீர்நிலைகள் மற்றும் வாய்க்கால்கள் மாநகராட்சிக்குட்பட்ட இடங்களில் உள்ளது</u>**<br><br>**<u>நீர்நிலைகள் விவரம்</u>**<br><br>1.தர்மராஜா கோயில் குளம் , 2.அழகப்பா நகர் குளம், 3. பெரப்பன் குளம், 4.வன்னான் குளம், 5.நல்லான் செட்டி குளம், 6.அண்ணா நகர், 7.கே.கே நகர் 8.வாலிக்குட்டை, 9.சூரப்ப நாயக்க சாவடி, 10.தில்லைவனத்துக் குளம், 11.சுப்ரமணியர் குளம், 12.அப்பர் குளம், 13.நாதன் நகர் குளம், 14.பாடலீஸ்வரர் கோவில் குளம், 15.கலெக்டர் ஆபிஸ், 16.எச்.ஆர் அன்ட் சிஇ, 17.தானம் நகர் குளம், 18.குயவன் குளம்.<br><br>**<u>ஆக்கிரமிப்பில் உள்ள நீர்நிலைகள் (குளங்கள்)</u>**<br><br>1.கே.கே நகர் எதிர்புறம் உள்ள குளம், 2.தர்மராஜா கோயில் குளம், 3.வன்னான் குளம், 4.நல்லான் செட்டி குளம், 5. சூரப்ப நாயக்கன் சாவடி குளம், 6.சுப்ரமணியர் கோயில் குளம், 7. தானம் நகர் குளம், 8.குயவன் குளம் வாய்க்கால். |

| | |
|---|---|
| | **வடிகால் வாய்க்கால்கள்**<br>1.சின்ன வாய்க்கால், 2.பெரிய வாய்க்கால், 3.கொண்டங்கி ஏரி வாய்க்கால் (புருகீஸ் பேட்டை), 4.பக்கீம்காம் கால்வாய், 5.குப்பன் குளம் வடிகால், 6.சீனிவாசன் நகர் வாய்க்கால், 7.அறிவுக்கரசி நகர் வாய்க்கால்.<br>**ஆக்கிரமிப்பில் உள்ள வாய்க்கால்கள்**<br>1.பெரிய வாய்க்கால், 2. கொண்டங்கி ஏரி வாய்க்கால் (புருகீஸ் பேட்டை), 3. குப்பன் குளம் வடிகால், 4. அறிவுக்கரசி நகர் வாய்க்கால் ஆகிய வாய்க்கால்கள் ஆக்கிரமிப்பில் உள்ளது.<br>எனவே நீதிமன்ற உத்தரவு மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரைப்படியும் 20.03.2022 க்குள் 12 நீர்நிலைகளின் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு உரிய புகைப்படங்கள் (ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கு முன்னர், ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டப்பட்டதற்கு பின்னர்) மற்றும் அதற்கான அறிக்கை விவரங்கள் அனுப்பாததற்கான விளக்கம் ஆணையரை கோரப்பட்டுள்ளதால், மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. |
| அ.கு. | பதிவு செய்யலாம். |
| 14) | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17 புதுப்பாளையம் இரட்டை பிள்ளையார் கோயில் தெரு பகுதியில் நவீன எரிவாயு தகனமேடை கட்டும் பணி ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும், விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |
| 15) | இம்மாநகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலைய கடை எண்.4, திரு. அசோக்குமார் என்பவரால் நடத்தி வரப் பெற்றது. இந்நிலையில் சந்தை மதிப்பின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் மாதம் 1க்கு ரூ. 3,67,750/– நிர்ணயம் செய்யப்பட்டது. வாடகை உயர்வினை குறைக்கக் கேட்டு சென்னை உயர்நீதி மன்றத்தில் திரு. அசோக்குமார் என்பவரால் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு எண்.WP. 1397/2018 என்பதாகும். இவ்வழக்கு மாநகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு. அசோக்குமார் என்பவரால் மேல்முறையீட்டு வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கும் மாநகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது கடை வாடகை நிலுவை ரூ. 2,01,62,930/– செலுத்தக் கேட்டு அறிவிப்பு அனுப்பட்டது. வாடகை நிலுவைத் தொகை செலுத்தாததால் இம்மாநகராட்சி வருவாய் ஆய்வரால் பூட்டி சீல்வைக்கப்பட்டது. அதன்பிறகும் வாடகையினை செலுத்தவில்லை. எனவே வாடகை நிலுவைத் தொகையினை பெறுவதற்கு நீதிமன்றம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும் மேற்படி கடையினை பொது ஏலம் விடுவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

**அ.கு.**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.

2) வழக்கு செலவினங்களுக்கு மாமன்றம் அனுமதிக்கலாம். (8021/18/அ2)

**16)**

இம்மாநகராட்சி மஞ்சக்குப்பம் அண்ணா நாளங்காடி கடை எண்.20—ஐ திரு. அப்துல் ஹமீது என்பவரால் வாடகைக்கு எடுத்து நடத்தி வரப்பெற்றுள்ளது. இந்தக் கடைக்கு வாடகை செலுத்தாததால் மாநகராட்சி வருவாய் ஆய்வாளரால் பூட்டி சீல் வைக்கப்பட்டது. இந்தக்கடையினை திரு. பாபு, திரு. ராமச்சந்திரன், திரு. தட்சணாமூர்த்தி ஆகியோர் தங்கள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யக் கேட்டு உயர்நீதிமன்றம் சென்னையில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு எண்.18878/2021 மற்றும் WMP.Nos.20150 & 20151 of 2021 ஆகும். இவ்வழக்கு இம்மாநகராட்சிக்குச் சாதகமாக 04.10.2021—ல் தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பினை எதிர்த்து மேற்கண்ட மூன்று நபர்களால் மேல் முறையீடு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு எண். WP.No.952 of 2022 and WMP.No.1017 of 2022 ஆகும். இம் மேல்முறையீட்டு வழக்கில் திருமதி. V. யமுனா தேவி, சிறப்பு அரசு வழக்கறிஞர் மாநகராட்சி சார்பில் ஆஜராகியுள்ளார். இவ்வழக்கில் மாநகராட்சிக்குச் சாதகமாக 25.01.2022ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மாநகராட்சி சார்பாக ஆஜராகியுள்ள திரு.V. யமுனாதேவி, சிறப்பு அரசு வழக்கறிஞர் ரூ.15,000/— வழக்கறிஞர் கட்டணமாக கேட்டுள்ளார். தொகை வழங்கவும், கடையினை பொது ஏலம் விடவும், நிலுவை தொகையினை சட்டப்படி வசூல் செய்வதற்கு ஆகும் செலவினத்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.8594/2021/அ2)

**17)**

இம்மாநகராட்சிக்குச் சொந்தமான மஞ்சக்குப்பம் அறிஞர் அண்ணா தினசரி நாளங்காடி கடைகளுக்கு வாடகைத் தொகைகள் செலுத்தாமல் நிலுவையாக உள்ளது.

| வ. எண். | Asst No. | கடைகள் விபரம் | குத்தகைதாரர் பெயர் (ம) முகவரி | நிலுவைத் தொகை ரூ. | O.S. No. |
|---|---|---|---|---|---|
| 1 | 211 | மஞ்சக்குப்பம் அறிஞர் அண்ணா நாளங்காடி கடை எண்.19 | திரு.ஆர்.ரங்கநாதன் | 2,29,114 | 91/22 |
| 2 | 210 | மஞ்சக்குப்பம் அறிஞர் அண்ணா நாளங்காடி கடை எண்.18 | திரு. D. சரவணன் | 2,39,926 | 102/22 |
| 3 | 209 | மஞ்சக்குப்பம் அறிஞர் அண்ணா நாளங்காடி கடை எண்.17 | S. தனலட்சுமி | 2,94,114 | 99/22 |
| 4 | 708 | மஞ்சக்குப்பம் அறிஞர் அண்ணா நாளங்காடி கடை எண்.14 | திரு. B. அரசு | 2,18,087 | 93/22 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 5 | 197 | மஞ்சக்குப்பம் அறிஞர் அண்ணா நாளங்காடி கடை எண்.5 | திரு.S.M.அபுதாகிர் | 1,97,784 | 96/22 |

மேற்கண்டுள்ள வ.எண்.1 முதல் 5 வரையுள்ள குத்தகை கடை உரிமைதாதர்கள் இம்மாநகராட்சியில் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகைத் தொகையினை குறைக்கக் கேட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு எண்கள்.91/2022, 93/2022, 96/2022, 99/2022 மற்றும் 102/2022 ஆகும். மேற்கண்டுள்ள வழக்குகள் இம்மாநகராட்சிக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தில் மாநகராட்சி சார்பில் வாதாடிய திரு.P.ஸ்ரீனிவாஸ், வழக்கறிஞர் உயர்நீதி மன்றம் அவர்களுக்கு 5 வழக்குகளுக்கும் ரூ.10,000/– வீதம் ரூ.50,000/– வழங்கவும் மேற்க்கண்டுள்ள வாடகை நிலுவைகள் சட்டப்படி வசூல் செய்வதற்கும் அதற்காகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம். (14703/ 16/ அ2)

18) இம்மாநகராட்சியின் ஆண்டுக் குத்தகை மற்றும் கடைகள் கீழ்க்கண்டுள்ளவாறு ஏலம் போகாமல் உள்ளது.

**அட்டவணை – I**

**ஆண்டுக்குத்தகை – 2022 – 2023 முதல் 2024 – 2025 வரை**

| இனம் எண் மற்றும் குத்தகை விவரம் 2022 – 2023 முதல் 2024 – 2025 வரை | வைப்புத் தொகை ரூ. | வங்கி உத்திரவாதம் அளிக்கவில்லை எனில் செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை ரூ. | வங்கி உத்திர வாதம் | மின் கட்டண ம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| **நாளங்காடிகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்** | | | | |
| 1. கடலூர் துமுகம் நகராட்சி நாளங்காடியின் தென்பகுதியின் காய்கறி பிரிவில் உள்ள நிரந்தர கடைகள் 97 கடைகள் தவிர மற்ற தரைகடைகளில் கட்டணம் வசூல் உரிமம் | 50000 | 50000 | 100000 | |
| 3.தேவனாம்பட்டினம் நாளங்காடியில் கட்டணம் வசூலித்துக்கொள்ளும் உரிமம் (ரோடு ஓரத்தில் இரண்டு ஸ்டால் நீங்கலாக) | 10000 | 15000 | 25000 | |

| | | | | |
|---|---|---|---|---|
| **6.**கடலூர் துறைமுகம் நகராட்சி நாளங்காடியின் வடபகுதியில் மீன்இறச்சி மற்றும் மாமிச பிரிவில் கட்டணம் லசூலிக்கும் உரிமம் (நிரந்தர கடைகள் 23 நீங்கலாக மற்றும் ராஜஸ்தான் அரசாங்கம் சுனாமி பேரழிவிற்கு பின்னர் மீனவர் நல்வாழ்விற்கான கட்டிடம் கட்டி சிந்தனை சிற்பி சிங்காரவேலனார் மகளிர் சுயஉதவிக் குழுவினரால் நடத்தப்படும் மீன் அங்காடி தவிர்த்து) | 40000 | 40000 | 100000 | 15000 |
| **பேருந்து நிலைய பேருந்து கட்டணங்கள்** | | | | |
| **10.**பேருந்துநிலையத்தில் வந்துசெல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் மற்றும் பேருந்து நிலையத்தில் இரவு நேரத்தில் நிற்கும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 500000 | 1000000 | 2000000 | |

**அட்டவணை – 2**
**பேருந்து நிலைய முதல் தளக் கடைகள் 1 முதல் 34 வரை**

| வ. எ ண் | கடை எண்கள் | கடை யின் அளவு விபரம் | வைப்புத் தொகை (ரூ. இலட்சத்தில்) | கூடுதல் வைப்புத் தொகை (ரூ. இலட்சத்தில்) | வங்கி உத்திரவாத சான்றிதழ் (ரூ. இலட்சத்தில்) | மின் கட்டணம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* | *8* |
| 1 | 1 முதல் 11, 14 முதல் 17 | 119 | 1.40 | 1.50 | 2.00 | 15000 | அலுவலக பயன்பாட்டிற்கும் பொதுப் பணித் துறை வழிகாட்டின் மதிப்பின் அடிப்படையிலும், தனியார் வணிகம் செய்ய வணிக பயன்பாட்டின் அடிப்படையில் தங்கள் தேவைக் கேற்றவாறு வழங்கப்படும். |
| 2 | 18 முதல் 21, 24 முதல் 34 | 102 | 1.40 | 1.50 | 2.00 | 15000 | |
| 3 | 12 மற்றும் 13 | 181 | 1.40 | 3.00 | 3.00 | 15000 | |
| 4 | 22 மற்றும் 23 | 155 | 1.40 | 3.00 | 3.00 | 15000 | |

## பேருந்து நிலைய உட்புறக் கடைகள் 5, 6, 41 மற்றும் 47

| வ. எண் | கடை எண்கள் | கடையின் அளவு விபரம் | வைப்புத் தொகை (ரூ. இலட்சத்தில்) | கூடுதல் வைப்புத் தொகை (ரூ. இலட்சத்தில்) | வங்கி உத்திரவாத சான்றிதழ் (ரூ. இலட்சத்தில்) | மின் கட்டணம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* | *8* |
| 1 | 5 | 200 | 2.00 | 2.00 | 1.50 | 15000 | |
| 2 | 6 | 200 | 2.00 | 2.00 | 1.50 | 15000 | |
| 3 | 47 | 130 | 1.40 | 1.00 | 1.00 | 15000 | |
| 4 | 41 | 130 | 1.00 | 1.00 | 0.75 | 15000 | (மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அவர்கள் மட்டுமே கலந்து கொள்ளவேண்டும் மாற்றுத்திறனாளிகள் மாவட்ட மறுவாழ்வுஅலுவலர், மாற்றுத் திறனாளிகள் அலுவலகம், கடலூர் அவர்களிடம் பெறப்பட்ட மாற்றுத்திறானாளி அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| வ. எண் | கடை எண்கள் | கடையின் அளவு விபரம் | வைப்புத் தொகை (ரூ. இலட்சத்தில்) | கூடுதல் வைப்புத் தொகை (ரூ. இலட்சத்தில்) | வங்கி உத்திரவாத சான்றிதழ் (ரூ. இலட்சத்தில்) | மின் கட்டணம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* | *8* |
| 1 | பேருந்து நிலையம் உட்புறம் கடை எண்.57 | 130 சதுர அடி | 1.30 | 2.00 | 1.30 | 15000 | |

| வ. எண் | கடை எண்கள் | கடையின் அளவு விபரம் | வைப்புத் தொகை (ரூ. இலட்சத்தில்) | கூடுதல் வைப்புத் தொகை (ரூ. இலட்சத்தில் ) | வங்கி உத்திரவாத சான்றிதழ் (ரூ. இலட்சத்தில்) | மின் கட்டணம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* | *7* | *8* |
| 1 | பேருந்து நிலையம் கடை எண்.19 A | 130 சதுர அடி | 2.00 | 3.00 | 2.00 | 15000 | |

மேற்க்கண்டுள்ள அட்டவணை I-ல் கண்டுள்ள குத்தகை இனங்கள் மற்றும் அட்டவணை II–ல் கண்டுள்ள கடைகள் ஏலம் விடுவதற்கும் 2022 – 2023ம் – 2024 – 2025–ம் ஆண்டு பொது நிபந்தனைகள், விளம்பர கட்டணம் மற்றும் ஏல விளம்பர அறிவிக்கை அச்சடிக்க ஆகும் செலவிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

**19)** கடலூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள 11 துப்புரவு பணிப்பிரிவுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கென தற்போது மாநகராட்சிக்கு சொந்தமான ஒரு டிப்பர் லாரி, இரண்டு டிராக்டர்கள் மற்றும் நான்கு இலகு ரக வாகனங்கள் என மொத்தம் 7 வாகனங்கள் மட்டுமே இயக்க நிலையில் உள்ளது. மீதமுள்ள 4 பிரிவுகளுக்கு 3 தனியார் டிராக்டர்கள் ஒப்பந்தம் மூலம் தினசரி வாடகை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்காணும் பணியானது மார்ச் 2022 உடன் ஒப்பந்தகாலம் முடிவுபெறுவதால், பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும், மேலும் மூன்று மாதங்களுக்கு ஏப்ரல் 2022 முதல் ஜீன் 2022 வரை தனியார் ஒப்பந்ததாரர் மூலமாக தினசரி வாடகையில் 5 டிராக்டர்களை தொடர்ந்து பணியமர்த்தி துரிதமாக தூய்மை பணிகளை மேற்கொள்ள தகுதியான ஒப்பந்ததாரர் / வாகன உரிமையார்களிடம் ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதற்கான தோராய செலவினம் ரூ.20,00,000/– மாநகராட்சி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**20)** குழும இயக்குநர், மாநில நல வாழ்வு மையம், சென்னை – 8 அவர்களின் செயல்முறை ஆணை எண்1869/NUHM/SHS/2015 நாள் 18.10.2021 ன் படி, தேசிய நல வாழ்வு குழுமம் (NUHM) கீழ் கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட திருப்பாப்புலியூர் நகர ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டும் பணி ரூ. 45.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம் |
| **21)** | கடலூர் மாநகராட்சி மாமன்ற கூடத்தில் மாநகராட்சி மேயர், துணை மேயர், ஆணையாளர், மாமன்ற உறுப்பினர்கள், பத்திரிக்கை நிருபர்கள், மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர்களுக்கான இருக்கை வசதிகள், கூடத்திற்கு குளிர்சாதன வசதி, ஒலிபெருக்கி, மைக்செட், மின்விளக்கு மற்றும் இதர பணிகள் ரூ. 75.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும், இச்செலவினத்தினை 2022–2023–க்கான தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள புதிய மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள சிறப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம் |

மாநகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 18.03.2022

ஆணையாளர்,
கடலூர் மாநகராட்சி.